**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**O.S.No.17/2023** **நாள்– 09.04.2026.**

4ம் பிரதிவாதி மகேஸ்வரன் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு பி.வா.சா. 1 ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் திரு.P.ஹரிகிருஷ்ணன், என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஸ்வரன் | தாலுகா | வெம்பக்கோட்டை |
| த–பெ | சொக்கையா (லேட்) | தொழில் | |
| கிராமம் | V.துரைச்சாமிபுரம் | வயது | 50 |

**<u>முதல் விசாரணை</u>**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**<u>4ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

1) 05.02.2016ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதியானவர் 4ம் பிரதிவாதிக்கும் மற்ற எதிர்வாதிகளுக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல் **பி.வா.சா.ஆ.1**.
2) 01.03.2016ம் தேதியிட்ட நானும், 1, 2 எதிர்வாதிகள் மற்றும் வீரராஜ், பாஸ்கரன் ஆகியோர்கள் அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் 2 எண்ணம் **பி.வா.சா.ஆ.2**.

**(குறுக்குவிசாரணை வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of April 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.